1085

கடவுள் துணை.

# நாஸ்திக இயக்க மண்டையை உடைக்கும் தண்டாயுதம்.

தூத்துக்குடி,

அ. ம. சங்கத்தாரால்

வெளியிடப்பட்டது.

சைவப்பிரகாசம் பிரஸ்,

தூத்துக்குடி.

1933.

# நாஸ்திக இயக்க மண்டையை உடைக்கும் தண்டாயுதம்.

வெண்பா.

கயமையுறுங் காமுகரிக் காசினியிற் றூமே
சுயமரியா தைப்பெயரைச் சூடிப்—பயமதின்றி
அண்டர்கோ னைத்தூற்றும் ஆங்காரம் மீாற்ற அவர்
மண்டைக்குத் தண்டா யுதம்.

அறிஞர்காள் !

"பேர் முத்துமாலை கட்டக்கரிய மணிக்கும் வழியில்லை" என்ற பழமொழிக்கிலக்கியமாய் இந்த "நாஸ்திகப் பதர்கள்" தங்களுக்கு ஒரு சிறிதும் பொருத்தமற்றதாகிய சுயமரியாதை என்ற பட்டப்பெயரைச் சூட்டி, தாம் உலகுக்குத் தொண்டுசெய்வான்போல் நடித்துக்காட்டி, சன்மார்க்கத்தை வேரோடு களைந்துவிடும்படியான கஞ்சற் கதைகளையும், காம விகாரங்களை மென்மேலும் மூட்டிவிடும்படியான வியாசங்களையும் தங்கள் பத்திரிகைகளில் தீட்டி, ஈசுர பக்தி, பூசுர பக்தி, இராச பக்தி முதலிய வழிபாடுகளை நம் நாட்டைவிட்டு ஓட்டிவிடுவதாகக் கங்கணங் கட்டிக்கொண்டு திரிவதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இன்னோரன்ன "பேச்சுப் பல்லக்கு தம்பி கால் நடை" என்ற போக்குகளை எல்லாம் விவரித்து இந்நாஸ்திகப்பேர்வழிகளின் அசங்கிர்த அசம்பாவித விகடோத்தர மாரடிப்புக்களை எல்லாம் ஒவ்வொன்றாய்

எடுத்துக்காட்டிக் கண்டித்து இவர்களின் தலையை நசுக்குதற் பொருட்டு "நாஸ்திக இயக்க மண்டையை உடைக்கும் தண்டாயுத" மென இத்துண்டுப்பத்திரத்துக்குப்பெயர் சூட்டலானேன்.

இதில் நாஸ்திகர்களுடைய குதர்க்க வாதங்களைப் பற்றியும், ஆஸ்திகர்கள் கூறியிருக்கும் சமாதான விடைகளைப் பற்றியும் விஸ்தரித்துச்சொல்லி எனது குறிப்புக்களைக்காட்ட உன்னினேன். சித்த சமாதானத்துடன் வாசிப்போர்யாவருக்குமிது நன்மை பயக்குமென்பதே என் பூரண நம்பிக்கையாகும்.

489
294.5
85744

சென்ற 24—9—33ல் இந்தத் திருமந்திர நகரின் பரிசுத்த பனிமயமாதா ஆலயத்தின் மண்டப முன்றிலில் நகர சங்கத்தின் சேர்மனும் பிரபு சிகாமணியுமாகிய ஸ்ரீல. ஸ்ரீமான் ஜே. எல். பி. ரோச் விக்டோரியா அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் இந் நாஸ்திகர்களின் அக்கிரமங்களை விளக்கிக் காட்டும் கண்டனக் கூட்டமொன்று நடைபெற்றதையும், அதற்கு ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஆண்களும் பெண்களுமாய்ச் சமுகங்கொடுத்திருந்ததையும் நீங்கள் சே[illegible]ப்பட்டிருப்பீர்கள். அதில், பிரசங்க சிங்கங்களாய்த் திசையெங்கும் இசைபெற்றிலங்கும் கல்விமான்களாகிய ஸ்ரீமான் T.T. சுந்தரம்பிள்ளை, பண்டிதர் எம்.பி. மஸ்கறனூஸ் வித்தியாபூஷணர் ஸ்ரீமான் A. [illegible]சிவமணிப்பிள்ளை இவர்கள் செய்துள்ள அ[illegible]ான உபந்நியாசங்களையும் நீங்கள் அறிந்திருப்பீர்களென நம்புகிறேன். ஆயினுமவர்கள் கூறியுள்ளவற்றின் சாராம்சத்தை மாத்திரம் எனது முதல்

நியாய தோரணையாக ஈங்கெடுத்துக் காட்டுதல் நன்றென உன்னிக் குறிக்கின்றேன்.

சன்மார்க்கமாகிய நல்லொழுக்கங்களை அறவே யொழித்து மக்களை மாக்களாக்கி அம்மிருக நிலைமையில் சமத்துவமாய்ச் சீவிக்கச் செய்யவேண்டுமென்பதே இந்த நாஸ்திக கோலாகலரின் முதல் நோக்கமாமென முதல் உபந்நியாசகர் கூறிஅதற்கு விடையாக ஓர் குறிப்பையும் தம் கருத்தாக எடுத்துச் சொல்லுவாராயினர். சமத்துவம் சமத்துவமென மாரடித்து மண்டையை உடைத்துக் கொள்ளும் இந்த நாஸ்திகச் சண்டாளர்கள் எல்லாரையும் சமமாய் நடத்த விரும்பின் உலகத்திலேயுள்ள கல்விமான்களது மூளைகளையும்,கல்வியறிவற்ற பாமர மக்களது மூளைகளையும், செல்வர் வறிஞர் ஆதிய எல்லா மாந்தர்களது மூளைகளையும் ஒன்றுயெடுத்து அடித்து உடைத்துக் கலக்கிக் குலுக்கி சகல மானிடர்களுக்கும் சமபாகமாய் பங்கிட்டுக்கொடுத்தால் ஒருவேளை இவர்கள் சொல்லும் சமத்துவம் சம உரிமை கிடைக்குமென நம்புகின்றேன் எனக் கர்ணாமிர்தமான தமது பிரசங்கத்தைச் சொல்லி முடித்தார். இதைக் கேட்டதும் சபையில் பெருஞ் சிரிப்பும் கரகோஷமும் நிகழலானது.

இரண்டாவதான சொற்பொழிவாசிரியர் ஸ்ரீமான் பண்டிதர் மஸ்கறனஸ் எழுந்து இதனை யாமோதித்து நாஸ்திகர்கள் கடவுள்பேரில் சொல்லுங் குறைமுறைகளை விளக்கிக் காட்டி கடவுள் உலகத்தையும் மற்றும் சராசரங்களையும் அமைத்திருக்கும் ஒழுங்குகளையும் அளவுகணக்கு திட்ப

நுட்பங்களையும், கிஞ்சித்துவ ஞானமுடைய மானிட சிற்றறிவு கிரகித்துக்கொள்ள முடியுமா என்றும் "அண்டத்திலே யுள்ளதெல்லாம் பிண்டத்திலேயு முண்டு" என்ற சுலோகப்படி, மானிடர்களது தேகத்திலேயுமுண்டு என எடுத்துக்காட்டி நாஸ்திகர்களுக்கு மாறாய்ப் பின்வரும் உதாரணத்தையும் விளக்குவோராயினர். மனிதனுடைய உறுப்புக்களெல்லாம் 'கண்ணாக' அல்லது 'கையாக' 'வாயாக' இல்லையேல் 'காலாக' 'தலையாக' செய்திருந்தால் என்ன பிரயோசனமாகும்? குயவன் தானும் செய்கிற மட்பாத்திரங்களை யெல்லாம் பற்பலவிதமாய் இயற்றுந்திறமை இருக்கும்போது சர்வ ஞானமுடைய கடவுளுக்கு மாத்திரம் இது புலப்படாமற் போகுமா? சொல்லுவார் சொன்னாலும் கேட்பாருக்கு மதி வேண்டாமா? பத்துப்பிள்ளை பெற்ற அம்மைக்கு ஒரு பிள்ளைபெற்ற அம்மை பக்குவங்கூறிய கதை போலன்றோ இருக்குமென வாசால பிரசாடணமாகச் சர்க்கரைப்பந்தலிலே தேன்மாரி பொழிந்ததற்கொப்பாய்த் தமது சொற்பொழிவை நிகழ்த்துவோராயினர். மூன்றாவதான வீரகேசரி ஸ்ரீமான் மாசிலாமணிப் பிள்ளையவர்களும் முன் பேசிச்சென்ற இருவர்களது வாக்குகளையும் ஆதரித்து அதிதுலாம்பரமாக்கி "அக்கினி மலையிலே கற்பூர பாணங்களைப் பிரயோகித்தது" போல, இதனை மிக ஆர்வத்துடன் கேட்டிருந்த ஆண் பெண்பாலார் சகலருடைய இருதயங்களிலும் வேதாபிமானமும் தேசாபிமானமும் ஒருங்கே சுவாலித்து எரியும்படியாய் விளக்கி முடிப்போராயினர்.

உள்ளபடியே பண்டிதர் மஸ்கறனாஸ் அவர்கள் கூறிய நியாயங்களில் ஒன்றைத்தானும் இந்தச் நாஸ்தீகப் பூண்டுகள்

சரியாய் ஆராய்ந்து பார்த்திருப்பார்களேயானால் கடவுள் உலகத்தைப் படைத்திருக்கும் அதி ஆச்சரியத்திற்குரிய கிரம அமைப்புக்களையும் திட்பநுட்ப ஞானங்களையும் உணர்ந்து அக்கடவுளை சதாகாலம் ஏசித்திட்டுவதற்குப் பதிலாய் வாழ்த்தித்துதித்து அவர் மகத்துவத்தை விவரித்துப் பிரசங்கித்துக்கொண்டு வருவார்கள் என்பதில் சிறிதும் மயக்கமில்லை. ஏனெனில், இந்த உலகமெல்லாம் கற்களாக அல்லது புற்களாக மரங்களாக இல்லையேல் மிருகபட்சிகளாக அன்றேல் சகலத்தையும் ஆடவராக அல்லது மகளிராக, எல்லாவற்றையும் இந்த நாஸ்திகப்பிண்டங்களின் கூற்றுப் போலச் சமத்துவமாகப் படைத்திருப்பாரேயானால், உலகம் இங்ஙனம் நடைபெறமுடியுமா? ருசியதேசத்தறிவீனர் படும் பாடு போலவன்றோ உலகம்முழுதும் அல்லோலகல்லோலப் படவேண்டி வரும்?

"ஊமையர் சபையில் உளறுவாயன் சண்டப் பிரசண்ட' னெனத் தோற்றியவாறு இவர்கள் பாமர ஜனங்கள் மத்தியில் தானுண்மையுடன் தோன்றித் தாங்கள் உலகத்திலேயுள்ள கலைஞான சாஸ்திரங்களெல்லாவற்றையும் கரைத்துக்குடித்து வந்திருக்கிறோம்; சதுர்வேதங்களோ ஆகம புராணங்களோ பைபிள் குர்ஆன் இதிகாச சாஸ்திரங்களோ தேவார திருவாசக சூத்திரங்களோ எங்களுக்கு எல்லாம் மனப்பாடமாய்த் தெரியும் என்று யானையைக் கண்டவனைக் கண்டவனைக் கண்டவன் போன்று புழுகடித்துக்கொண்டு மண்ணைப் பொன்னுக்குவோம், கழுதையைக் குதிரையாக்குவோம், அரிசனங்களைப் பிராமணராக்கு

வோம், அரசரைப்பிச்சைக்காரராக்குவோம், பெண்ணை ஆணுக் குவோம், சகல மனுஷரையும் நிர்வாண கோலமாக்குவோம் என்று வாயில் வந்தவந்தபடி யெல்லாம் உளறிக் குளறிக் கொண்டு மாதா, பிதா, குரு, தெய்வம் என்னத்துக்கு? நாங் களே நினைத்த நினைத்தபடியெல்லாம் வந்துகொள்ளலாம் நடந்து கொள்ளலாமென வாசால பிரசாடணம்போற் பேசிக் கொள்வார்கள். இத்தகைய பெரும் புழுகர்களுக்குத் தற்செய லாய் ஒரு ஆபத்துத் தலைநோவு வந்து விட்டால் அப்போது தான் கடவுளை தெய்வத்தை நினைப்பார்கள். அப்போதுதான் படைத்தவன் ஒருவன் இருக்கிறானென எண்ணி அவர் பாதாரவிந்தங்களில் சரணடைய நாடி ஓடிவருவார்கள். இதற் குதாரணமாக சமீபத்தில் நடந்த ஓர் உண்மைச் சம்பவத்தை சுண்டெலிக்கதையையல்ல சகலவைதீக பத்திமான்களும் அறி ந்த ஓர் சரிதையை இங்கு குறிப்பிடுகிறேன். கவனித்துப் பாருங்கள்.

சென்ற பத்து வருடத்துக்குள்ளாக மெக்சிக்கோ தேச த்தில் பெருங் கலகந் தொடுத்தவனும், மேற்றிராணிமார் குருக்கள் கன்னியாஸ்திரீகள் சன்னியாசிகள் முதலியோர்க ளது நல்ல பெயரைக் கெடுத்து அவர்களை நாட்டைவிட்டு ஓடச்செய்து கோயில்களையும் பள்ளிக்கூடங்களையும் குரு மடங்களையும் தீக்கிரையாக்கி அநேக ஆயிரக்கணக்கான கிறீஸ்துவர்களைச் சங்காரம்பண்ணி அத்தேசத்தை ஆண்டி ருந்த நாஸ்திகனை **யோசேப் காலிஸ்** என்ற பிரசாதிபதி தேவசாபமடைந்தவனைச் சகல வியாதிகளிலும் மிகக்கொடி யதான குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டு பெண்சாதி பிள்ளை

களாலும் பந்துமித்திரர்களாலும் தான் நம்பியிருந்த கவர்ண் மென்றுலும் கைவிடப்பட்டு ஓர் ஆதாரமுமின்றி ஊருக்குப் புறம்பாயிருந்து கடவுளைநோக்கி வேண்டுதல் செய்தபடியால் அவனை, அவன் எசித் திட்டித்துரத்திய கத்தோலிக்க குரு மார்களே கூட்டிக்கொண்டுபோய் வைத்து தற்போது ஆதரி த்துக்கொண்டு வருகின்றூர்கள். (சர்வவியாபி 31—5—33). பாருங்கள். தீமை செய்தவனுக்குச் சத்தியவேதக் குருக் கள் செய்யும் நன்மையை; இம்மட்டா? ஆபத்தான தருணத் தில் கடவுளிடம் சரண் அடைய ஓடிவந்தவர்கள் பெயரை எடுத்துரைக்கவேண்டுமேயானல் எனது இச்சிறு துண்டுப் பிரசுரம் இடம்பெறுதென நினைக்கிறேன். கப்பற் பிரயா ணத்தின்போது புயலிலே அகப்பட்டுக்கொண்டிருந்த பென் னம்பெரிய நாஸ்திகனை வோல்நே என்பவன் செபமாலையை எடுத்துவைத்து செபித்துக்கொண்டிருக்கும்போது கூடவிரு ந்தவர்கள் அதிசயப்பட்டுக் கேட்டதற்கு அவன் மறுமொழி யாக கடவுளைப்பற்றிப் பேசுகிற இடம்வேறு, கடற்புயலில் அகப்பட்டுத் தத்தளித்து அவர் சலுகையைக் கேட்கிற இடம் வேறு எனக்கூறினனும்.

நாஸ்திக மக்களே! சுயமரியாதைச் சுண்டெலிகளே! இந்த மெக்சிக்கோ தேசாதிபதியைப் போலும் அந்த வோல்நே எனும் விஞ்ஞான சாஸ்திரியைப்போலும் நீங்க ளும் ஓர் நாள் பரிதபிக்கவேண்டி வருமென்பதை நினைத்துக் கொள்ளுங்கள். இப்போ உங்கள் பத்திரிகைகளிலு ம்துண்டுப் பிரசுரங்களிலும் உபந்நியாசங்களிலும் கடவுளையும் அவரது அணைகடந்த ஞானத்தையும், அவர்கொடுத்த வேதத்தையும்

குருக்கள் சன்னியாசிகள் கன்னியா ஸ்திரீகளாகிய அறத்தோர்களையும் உங்களது இரத்தத்துடிப்பால் அகங்காரத்தால் "வயிற்றிலிருக்கும் மலத்தை கொழுப்பென நினைத்த" மதியிலியைப்போல நினைத்து வாயில் வந்தபடியெல்லாம் தூஷண பாஷண கோஷண மொழிகளைக்கொண்டு பேசித் திட்டி வைது வருகின்றீர்கள்.

காணுமல் வேணதெலாங் கத்தலாம் கற்ருேர் முன்
கோணுமல் வாய்திறக்கக்கூடாதே—நாணுமல்
பேச்சுப் பேச்சென்னும் பெரும்பூனே வந்தக்கால்
கீச்சுக் கீச்சென்னுங் கிளி.

என்றது போல் அந்த மரணமென்கிற பூனே வரும் சமயத்தில்தான் சுண்டெலிகளாகிய நீங்கள் படப்போகிற பாடு தெரியும். "அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கு" மென்ற சுலோகத்தை மறந்துபோகாதேயுங்கள்.

"என்னைப்போல ஒயிலும் எங்கள் அக்காளைப்போலக் குரலும் இல்லை என்றதாங் கழுதை" என்பதற்கிலக்காய் நாஸ்தீகத் தலைவர், ஈ. வெ. ராமசாமிப் பெரியாரும் அவர் குழுவினரும் பேச்சிலும் எழுத்திலும் நடபடிக்கைகளிலுங் காட்டிக்கொண்டு ஊரிலேயுள்ள சோம்பேறிவாலிபர்களையெல்லாங் கெடுத்துக்கொண்டு திரிகிருர்கள். "பைபிள்" என்ருல் என்ன? வேதாகமங்கள் என்ருல் எத்தகையது? யாரால் கொடுக்கப்பட்டது? என இந்தச் சு. ம. காரரிடத்தில் வினவினுல் தறபிற என்று விழிப்பார்கள். மூக்கைப் பிடித்தால் வாயைத்திறக்கவல்லமையற்றஇந்தநாஸ்திகப்போலிகள் தாங்கள் ஏதோ சகலமுமறிந்த கலாஞானிகள் போலத் தர்க்

கத்துக்கு வெளிப்பட்டுத் திரிவதைப் பார்க்கவே சிரிப்பாயிருக்கின்றது. சினிக்கி என்றவன் வாந்திசெய்த கஞ்சல்நூலை அமரிக்கரும் ஐரோப்பியரும் குப்பையென ஒப்பமிட்டு ஒதுக்கிவைத்த அசங்கிர்த அசம்பாவித அபாண்ட ஊழல்களை "காக்கை உவக்கும் பிணம்" என்றதற்கொப்ப இந்த நாஸ்திகக் காக்கைகள் உவந்தெடுத்து உச்சிமேல் வைத்து மெச்சி "சேற்றுக் கடலுள் பீற்றல் தோணியைவிட்டு ஆட்டிய" வீரனைப்போலத் தங்கள் பத்திரிகைகளில்போட்டு ஆர்ப்பரித்துக் கொண்டு வருகின்றார்கள். பாவசங்கீர்த்தனத்துக்குப்போகிறவர்களெல்லாம் மானங்கெட்டுப் போகின்றார்களென இந்த யோக்கியர்கள் "வெள்ளாடு நனையக்கண்டு வேங்கை விழுந்து விழுந்தழுத" கதைக்கொப்ப ஒப்பாரிவைத்து ஓலமிடுகின்றார்களே.

பாவசங்கீர்த்தனம் என்றால் என்னவென்று இவர்களைக் கேட்டால் ஐயோ! பாவம்! திகைப்பார்கள். திடுக்கிடுவார்கள். ஆமையென்றுசொன்னேன். காதுகுடைய இறக்கை பிடுங்கிவா என்று நமது மூடசிநேகிதர் கூறுகின்றாரே என ஒரு நண்பனைப்பற்றி இன்னொரு நண்பருக்கு ஒரு பெரியார் உரைக்க, அவர் முன்கூறிய மூடசிரோன்மணியிலும் மூத்த சிரோன்மணியாய் அடே! அவன், முயல் என்று நினைத்தானாக்கும் என்ற கதையைப் போலத்தான் இந்தப் பரமார்த்த குரு ராமசாமிநாயக்கரும்,அவர் தோழன்மார்களும்நமதுவேத ஆராய்ச்சியில் வெகு தீரசூரர்களாய்க் காணப்படுகின்றார்கள். ஸ்ரீமான் நாயக்கர், தாஸ் என்ற இவர் தோழனிடம் தற்போதிருக்கும் பாப்பானவரைப் பதினோராம் பத்திநாதகரென

அழைக்கின்றார்களே ; அதற்கு முகாந்தரந்தானென்னவென வினவ, அவர் இந்தப் பாப்பு பதினொரு விதமான பக்தி உள்ளவரென்றும் அதாவது, செபமாலை பக்தி, நற்கருணைப் பக்தி, தேவதாய்ப் பக்தி, சிலுவை பக்தி என்று மளமள வெனப் பதினொருவிதமான பக்திகளை எடுத்துச் சொல்லி முடிக்கவே இதைக் கேட்டிருந்த இன்னொரு மூத்தசிரோன் மணியார் அப்படியன்று; இவர் ப தி னொ ரு பட்டம்பெற்ற பெரிய குருவென்றும்,மற்றவர்கள் ஆறு அல்லது ஏழு எட்டு அதுவும் மிஞ்சினால் பத்து பட்டத்துக்குமேற் பெறமுடியா தென்றும் கூறிமுடித்தாராம். இப்படிச்சொன்ன இருவரும் அரிஜன கிறிஸ்துவர்களாயிருந்து தவறிச் சு. ம. வில் சேர்ந்த மதியூகிகளாம். இங்ஙனமே ஈ. வெ. ராமசாமிப் பரமார்த்த குருவுக்கு "மொட்டச்சிக்கேற்ற மூக்கறையன்" சேர்ந்தது போலச் சில மட்டி மடையன் மிலேச்சன் மூடன் முதலிய சீடர்கள் சேர்ந்துகொண்டு நமது மார்க்கத்தையும் ஆராய்ச்சி செய்யப்பார்க்கின்றார்கள். "பேயை யழைத்துத் தாயை கேலி பண்ணிய" விவேக சூனியனைப்போலப் பெற்ற தாயாகிய திருச்சபையிடத்தில்தான் தாங்கள் கற்ற வித்தையைக் எடுத்துக் காட்டித் "தீட்டுத்தடியில் கூர்மை பார்த்தவர்" ஒப்பப் பார்க்கின்றார்கள். இவர்கள் எதைத்தான் எழுதி விட்டென்ன? குளறிக் குட்டிக்கரணம்போட்டுத்தானென்ன?

கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும் தம்வாயால்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்வரோ
மேன்மக்கள் தம்வாயால் மீட்டு.

என்றபடி நாய் கடித்ததென்று நாயை வீழ்ந்து கடிப்பாரை யாண்டுங் கண்டிலேம் என்ற நீதியைச் சிரமேற்கொண்ட கத்தோலிக்கராகிய நம்மவர் ஞாயத்தோடேயன்றி நியாய வரம்பு கடந்து கீழ்நோக்கிப் பேசமாட்டார்களென்பதையும் இந்தச் சு. ம. காரர்கள் அறிவார்களாக. இந்தச் சு. ம. தலைவரது யோக்கியதையும் அவர் தோழன்மார்களது நடபடிக்கைகளின் காட்சிகளையும் எடுத்துச் சீர்தூக்கிப் பார்ப்போமேயானால் அது "மணற்சோற்றில் கல்லாராய்ந்த" கதையை ஒக்குமென விடுத்து ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோன்று இந்தச் சு. ம. தலைவர் ஈ. வெ. ராமசாமிப் பெரியாரது சீவிய நடபடிக்கைகளில் மாத்திரம் ஒரு சிறிது ஆராய்தல் நன்றெனக் குறிக்கின்றோம். இந்த ராமசாமிப் பெரியார் தனவந்தரான பெற்றோர்களிடத்தில் இருந்து பிறந்தும் இவரது நடபடிக்கைகள் இவர் தந்தையாருக்கு பொருத்தமற்றதாய்க் கண்டபடியால் இவருக்குச் சேரவேண்டிய சொத்து முழுவதையும் ஓர் கோயில் பேருக்கு எழுதிவிட்டு இவர் செலவுக்காக அப்பூமி வரும்படியில் ஓர்பாகத்தை மாத்திரம் காட்டிவிடலாயினர். இதைக்கொண்டு இப்பெரியார் எத்தகையார் என்பதை வாசிப்போர்களே யோசித்தறிந்து கொள்ளலாம். தூரப்போவானேன், சென்ற வருடத்தில் தம்முடன் ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த தங்கைதோழன் ஸ்ரீமான் இராமநாதன் அவர்களை ஆபத்தான நிலைமையில் ஆஸ்பத்திரியில் போட்டுவிட்டு தம் சொந்த ஊருக்குத் திரும்பி ஓடிவந்த பிறர்சிநேக புண்ணியம் நிறைந்த பெரியார் இவர்.

நாட்டுக்கோட்டை செட்டிப்பிள்ளை யொருவர் தம் சாகியத்தவர்கள் பேசும்போதும்எழுதும்போதும் அளவிற்கு மிஞ்சி, 'இழவு' என்ற அமங்கல மொழியை உபயோகிக்கின்ருர்களே எனப் பெரிதும் சலிப்புற்றவராய் அத்திய வழக்கத்தை வேரொடு களைய உன்னி ஓர் பெருத்த சபையைத் திரட்டிக்கூட்டி மேடையின்மேலே வெகு ஆத்திரத்துடனே ஏறிநின்று தம் சாகியத்தவர்களைப் பார்த்து "இழவென்று சொல்லாதேயுர்களடா இழவு," என்ற கதையைப்போல இந்தச் சு. ம. தலைவரும் அவர் சங்கத் தங்கத்தவர்களும் பேச்சளவிலே பெரிய ஞானவான்களைப் போலப் பேசிக் காரியத்தளவிலே "அந்தக் குடிகாரன் இருக்கட்டும் வாரடா எனக்கிரண்டு முட்டி கள்ளு" என்றவனுடைய நடபடியைப் போல் நடந்து காட்டுகிருர்கள். வெட்கங்கெட்ட காற்காசு பெருத இவர்களது பத்திரிகைகளை எடுத்து வாசித்துப் பார்த்தால் இவர்களது சுய குணமும் நடபடிக்கைகளுமே இரண்டும் இரண்டும் நான்கென்றதுபோலப் பட்டப்பகலாய் வெட்ட வெளிச்சமாய் ஆங்கு தோற்றப்படும்

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம்.

என்றபாடலை வீணுக்கா பாடிவிடலானுர்கள்; நாஸ்திகர்களது எந்தப்பத்திரிகைகளை எந்தத்துண்டுப் பிரசுரங்களை எடுத்துப்பார்த்தாலும் அங்கு கடவுளைப் பற்றியும் மதத்தைப்பற்றியும் ஆபாச தூஷணையாய் எழுதி விட்டிருப்

பதையே பார்க்கலாம். இதற்குக் காரணம் யாதென யான் ஒரு பெரியவரை வினவ அவர் அதற்கு பின்வரும் உதாரணத்தை எடுத்துக் —அவாராயினர்.

உலகமெல்லாம் நடுங்கும்படியும் ஐரோப்பியதேச வல்லரசுகளெல்லாம் பயப்பிராந்தி கொள்ளும்படியும் செங்கோலோச்சிவந்த வெற்றிவேந்தனன பிரான்சு தேசத்தின் சக்கிராதிபதியாகிய நெப்போலியன் போனபாட் என்பான் பகைவர்களை எல்லாம் முறியடித்துச் ஜெயசீலனாய் அப்பகைவர்களது தலைப்பட்டினத்துள் ஒட்டோலகமாய்ச் சென்றபோது அவனை வரவேற்று மரியாதை வேட்டுகள் தீராமலும், ராசபேரிகை முழக்காமலும் இருப்பதைக் கண்ணுற்று விழித்துத், தன் சேனாநாதனை உடனே அழைத்துத் தான் வருவதை ஏற்கனவே யறிந்திருந்தும் மரியாதையாக என்னை ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை என எச்சரித்தபோது, அச்சேனைத்தலைவன் கூறுவான் "மகாராஜாவே! தங்களை தக்கபடி உபசரித்து அழைத்துக்கொள்ளாததற்கு இவ்விடத்தில் இருபத்தொரு நியாயமிருக்கிறதென்றும் அதில் முதல் நியாயம் இவ்விடத்தில் பீரங்கிகள் இல்லாததே என்றும் சொல்லி முடித்ததாய் அந்த நண்பர் கூறலானார். இதுபோலவே, நமது சுயமரியாதை நண்பர்களிடத்திலும், பெரிய பீரங்கியாகிய கடவுட்பக்தி இல்லாதபோதே வேறென்ன பக்திதான் அவர்களிடம் குடிகொண்டிருக்கும். "பண்ணுவ திடும்பு செய்வது பாவம் படிப்பது கபடமுங் களவும், பரத்தையர் சேரி தமக்கொரு கோயில் பாவையராசையே பயிற்சி, எண்ணமுங்கருத்தும் பணத்தின்மேற் பணப்பேய்எறி ஊரூர்

தொறுந் திரிந்திங்கிரப்பது தொழிலாய்" என்று கவிச்சக்கரவர்த்தியாகிய சத்தியவேத கலாஞானி கூறிய பாடலைப் போல, திரிகின்ற நடைகளிடத்திலே [illegible]ய் மரியாதை யொக்கியம் முதலியவந்து இராசநீதி மனுநீதி யென்பவை இருக்குமா? அன்றேல் அன்பு அறம் சாந்தம் தயை கற்பு இச்சை யடக்கம் முதலிய சுகுண லட்சணங்கள் தங்குமா? ஒருவர் உண்டு என்றால் அவர்கள் அது இல்லை என்பார்கள். வெள்ளையென்றால் அப்படியல்லக் கறுப்பெனச் சாதிப்பார்கள். இப்படிச் செய் என்றால் இல்லை அது மற்ற மாதிரியெனக் கற்றோர் சிரிக்கும்படி சொல்வார்கள்.

கல்வியறிவிற் சிறந்த ஒரு மாது' சிரோன்மணிக்கு இந்தச் சு. ம. சுண்டெலிகள் போன்ற ஓர் மூட சிரோன்மணி வாழ்க்கைத்துணையாகத் தெரிந்து கொள்ளப்பட்டார். சிறிது காலம் சென்றபின்னர் அந்தப் பெண்மணி காய்ச்சலென்னும் கொடிய சுரத்தால் பீடிக்கப்பட்டவளாய்த் தனது நாயகனைத் தர்ம வைத்தியசாலைக்கனுப்பி மருந்து வாங்கிவரும்படி தூண்டிவிடலானாள். அப்படியே மருந்துப் புட்டியில் மருந்துவாங்கி வந்த அவர், வீட்டில் வந்ததும் பாயும் படுக்கையுமாய்ப் படுத்திருந்த அந்த ஏழைப்பெண்ணைத் திடீரெனத் தூக்கித், தமது முரட்டுக் கரங்களால் அவளது இரண்டு தோள் புஜங்களையும் தாவிப்பிடித்து திடுதிடென்று குலுக்கத் தொடங்கினாராம். காய்ச்சலின் வேகத்தாலும் இவன் அசைத்தாட்டும் கோரத்தாலும் தாங்க முடியாது அந்த நங்கையானவள் ஐயோ! ஐயோ!! கொல்லுகிறார் கொலை செய்கிறார் எனக் கதறினாளாம். இதனைச்

செவியுற்ற அயலகத்தார் எல்லாரும் வந்து பார்த்து இந்த வீரசிரோன்மணியை நோக்கி, ஏனப்பா, காச்சல் காரியை இப்படிக் குலுக்குகின்றாய் என்று கேட்டதற்கு போங்கள் உங்களுக்கென்ன தெரியும் டாக்டர் சொன்னார் இந்த மருந்தை நன்றாய்க்குலுக்கியபின் கொடுக்கும்படி. நான் அதேபிரகாரம் செய்கிறேனென மீண்டும் ஒரு குலுக்கு குலுக்கினானும் வந்திருந்த சனங்கள் அட பாவிப்பயலே மருந்தைப் புட்டியுடன் எடுத்துக் குலுக்கிக் கொடுக்கச் சொன்னாரா உன் மனையாட்டியின் புசத்தைப் பிடித்துக் குலுக்கச் சொன்னாரா? என்று அவனைக் கேட்டார்களாம் உடனே அந்த தடிமடையன் கோபங்கொண்டு என் பெண்டாட்டியை நான் என்ன செய்தாலும் நீங்கள் கேட்கவேண்டிய அவசியமில்லையென அவர்களைத் திட்டிப்பேசி அதட்டித் துரத்தினானும் கேட்டீர்களா இந்த வீரவானைப் போலவே நமது சுயமரியாதைச் சுண்டெலிகளும் தாங்கள் பிடித்த முயலுக்குக் கால் மூன்று எனச் சாதித்து வாதித்து நிற்பார்கள். இவர்களுக்கு கடவுள் மோட்சம் பாவம் புண்ணியம் நரகம் என்பதொன்றுமில்லை கண்டதே காட்சி கொண்டதேகோலம் விண்டதே பேச்சு என்று ஒரே பிடிவாதமாய்க் கூறுவார்கள் தங்களுக்கு பெற்ற தாய்தகப்பன் பேரன் பாட்டன் பூட்டன் வோட்டன் என்பதில்லை யென்றும் தாங்கள் அவர்களைக் கண்ணாலே பார்க்காத படியால் நம்பமாட்டோமென்றும் ஒரே பிடிவாதமாகச் சாதிப்பார்கள் பெற்ற தாயையும் செத்த நாயையும் ஒரு படியில் வைத்து நியாயம் பேசிமுடிப்பார்கள். விசுவாசம்என்றால் அது வெள்ளையோ சிகப்போவென அதன் நிறத்தை உசாவுவார்கள்.

பிறவிக்குருடனுக்குப் பிறந்திருந்த குழந்தையொன்று பால்விக்கிச் செத்துப்போனதாக அந்தக் குருடனிடத்திலே அவனது சொந்தக்காரர் வந்து சொன்னார்கள் குருடன் அதைக்கேட்டுச் சஞ்சலமடைந்தவனாய்ப் பால் என்றால் எப்படியிருக்குமென வினவ அவர்கள் வெள்ளைநிறமெனக் கூறினார்கள்' அந்தகன் வெள்ளைநிறமென்றால் அது எதனைப் போன்றதெனக் கேட்க அவர்கள் கொக்கைப்போன்றதென விடையளித்தார்கள். கொக்கு என்றால் எப்படி யிருக்குமென அந்தக்கண்ணானன் உசாவ அவர்கள் உனது முன்னங் கையை வளைத்துத் தடவிப்பாரென விடையிறுத்தார்கள் அவன் அங்ஙனமே தடவிப்பார்த்துவிட்டு அப்பப்பா? இந்த முரட்டுக்கட்டைபோன்ற பால்தான் ஆறுமாத குழந்தையின் தொண்டைக்குள் பிரவேசித்தால் சும்மாதான் விடுமா என்ற குருட்டு ஞாயம் போலத்தான் இந்த ஞானக் கண்ணில்லாக் குருடரும் ஒறுத்தல் உபவாசம் விரத அனுஷ்டானம் சன்னியாசம் தவதானம் முதலிய புண்ணியக் கிரியைகளையும் தெய்வ வழிபாடுகளையும் வீணாய் எதிர்த்துப்பேசி ஏசி எழுதிக்கொண்டு வருகின்றார்கள். இந்த நாஸ்திகத் தடிமடையரில் ஒருவனை யான், பழனியில் சந்தித்துப் பேசியபோது நீங்கள் கடவுளுமில்லை வேதமுமில்லை ஒரு வழிபாடுகளும் அவசியமில்லையெனக் கூறுகின்றீர்களே. வேறு என்னத்தைத்தான் மனுஷன் அதிகமாய் அனுஷ்டிக்கவேண்டுமென வற்புறுத்துகின்றீர்கள். தயவுசெய்து அந்த இரகசியத்தைக் கூறமுடியாதா என்றபோது பின்வரும் வெண்பாவை அவர் பாடலானார்.

கன்னலின்றி வேம்புநுகர் காமத் துரோகிகள் போல்
பின்னையொரு தெய்வத்தைப் பேசோமே—எந்நாளும்
சாற்றுவதுங் காமகலை சாதிப்பதூங் கரணம்
போற்றுவதுங் காமனடிப் போது. என்ற பழைய

பாடலின்படி ஸ்திரீ போகமே மோட்சலோகமெனக் கூறி முடித்தார். பார்த்தீர்களா! இந்த நரகப் பசாசங்களின் வேலையை. காமத்தையும் காமத்தீயையும் மூட்டிவிடுகின்ற குடிவெறியையும், சுகபோகங்களையுமே இந்த ஞானக்கண்ணில்லாக் குருடர்கள் போதித்துக்கொண்டு வருகின்றார்கள்.

குடிகூத்தி வஞ்சங் கொடுஞ் சூதிங் நான்கும்
மிடிதரக் கேடுவரும். என நமது முன்னோர்கள்

கூறியதற்கு மாறாய் "குடியாத வீடு விடியாது" என்ற கருத்துப்பட ஸ்திரீ போகமே மோட்சலோகமென இந்த மானங்கெட்ட வீணர்கள் உபதேசிக்கின்றார்களே; கொலை, களவு, விபசாரம், வஞ்சகம், குடிவெறி முதலிய பஞ்சமா பாதகங்களையுந் துணிந்து செய்யும்படி பேசியும் பத்திரிகைகளிலும் துண்டுப்பத்திரங்களிலும் பிரசுரித்தும் வருகின்ற இவர்கள்தானா சுயமரியாதையுடையவர்கள்? இந்தச்சுயமரியாதை என்றதின் அர்த்தம் தெரியுதில்லையே. விஷப்பாம்பை நல்லபாம்பென்றழைப்பதுபோல் விஷமாகிய கொலை பாதகம், கருப்பத்தடை, ஒரு மணத்திற்குப் பதிலாய் பல மணம், மிருகங்களைப் போன்ற நிர்வாணம் முதலியவற்றைப் போதித்தும் வாதித்தும் பத்திரிகைகளில் தீட்டியும் வருகின்ற இவர்களது நடபடிக்கைதான் சுயமரியாதையா? எந்த நாஸ்திகப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தாலும், ஸ்திரீ

சோரம், காமவிகாரம், காதற்கடிதம், ஸ்திரீகளைக் கெடுத்த சரித்திரம். இம்மட்டா; தின்ற கதை, குடித்தகதை பெண்களுடன் நடமாடித் திரிந்தகதை, கூத்துப்பார்த்த கதை, மோண்டுவிட்டோடிய கதை, சீ சீ, வெட்கமின்றி இவைகளையும் ஒரு படித்த அறிவாளியான பத்திரிகாசிரியர் தமது பத்திரிகைகளிற்போட இடங்கொடுப்பாரா? இத்துடன் நிற்கின்றார்களா? கடவுளை எதிர்த்து நோட்டீஸ் கொடுப்பதும், தேவதூஷணை மத தூஷணை பெரியோர்கள் தூஷணை முதலிய தூஷண பாஷண கோஷண அத்திரங்களைப் பொழிவதும், மனுஷன் செய்யக்கூடாதென விலக்கியிருக்கும் காரியங்கள் எவைகளோ அவைகளையெல்லாம் செய்யலாமென உன்மத்தங்கொண்டு பித்தலாட்டமாய் எழுதிப்பரப்புவதும் அந்தந்தோ! இவர்களது பத்திரிகைகளைப் படிப்பதால் உலகுக்கு வருங்கெடுதிகளோ உரைக்கரியவைகளே.

கொடிது? கொடிது? நாஸ்திகங்கொடிது. அதனிலுங் கொடிது? சுயமரியாதை. அதனிலுங் கொடிது? சுண்டெலி வண்டர்கதை. அதனிலுங்கொடிது? "குடியரசு வெடிகுண்டு" காட்டும் பாதை. அதனிலுங்கொடிது? அதைப் படிப்பதூம் கேட்பதூம் தானே என்று கூறினும் மிகையாகாது.

தெய்வம் ஒருவர் உண்டென்று விசுவசிக்கும் சர்வசமய வைதீக சாஸ்திரிகளே! அறிவாளிகளே! கலைஞானிகளே! நீங்கள் எந்தெந்த மார்க்கத்தவர்கள் எனினும் எந்தெந்தச் சாகியத்தவர்கள் எனினும் என்னென்ன பாஷையை பேசுகின்றவர்கள் எனினும் பறவாயில்லை. நீங்கள் எல்லாரும் கடவுள் ஒருவர் உண்டென்ற அஸ்திவாரமான விசுவாசமுடைய

வர்களாயிருப்பதால் நமது பாரதத்தாய் வீற்றிருக்கும் பரிசுத்த தேசமாகிய இப்பரதகண்டத்தில் முன்எக்காலத்திலுங் கேள்விப்பட்டிராத இந்த நவீன நாஸ்திக அரக்கனை! இந்த நாணங்கெட்ட நிருவாண இராட்சதனை! கடவுளை, வேதத்தை கற்புநிலைமையை வேண்டாமெனத் தூஷிக்கும் மலப்பன்றியை நம் நாட்டைவிட்டு அதட்டி ஓட்ட எழுந்து வாருங்கள் திரண்டு வாருங்கள் கடவுளுக்காய் உடல் பொருள் ஆவி மூன்றையுந் தத்தஞ்செய்து வனவாசத்தில் வசித்துக் கந்தமூலாதிகளைப் புசித்த ரிஷி முனிவர் ஆகிய தபோதனர்களின் சீடர்களே! கண்ணை நிமை காப்பதுபோலக் கற்பு நிலைமையைக் காப்பாற்ற உபதேசித்து வரும் இந்திய மாதா ஈன்றெடுத்த கலாஞான சாஸ்திரிகளே! வீரகேசரிகளே! வஸ்திரங்களை மாற்றி மாற்றிக் கட்டுவது போல ஸ்திரீகளையும் விட்டு விட்டு கட்டலாமென்று மிருகத்தனமாய்ப் போதிக்கும் இந்த மிருகத்தை! கொலை செய்யும்படி கர்ப்பத்தடையை எடுத்துக் கூறும் இந்த நாஸ்திக பசாசத்தை! அடியோடே தொலைக்க இந்நேரத்தில் நீங்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து ஒருமனப்பட்டு வெருட்டினுல் இந்த நாஸ்திகப்பேய் இருந்தவிடமுந் தெரியாமற் பஞ்சாய்ப்பறந்து போகுமென்பதிற் சிறிதும் மயக்கமில்லை.

சென்ற வாரத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குலைக்க வேண்டுமென்று வாலைச் சுழற்றிக்கொண்டுவந்த நாய் பட்ட பாட்டையும் ஓடிய ஓட்டத்தையும் கேள்விப்பட்டிருப்பீர்களே? ஆதலால், எழுமின்! விழிமின்!! எல்லவருமேகோபித்து உழைமின்!!!.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் அமெரிக்காவில் செய்துள்ள ஓர் உபந்நியாசத்தில், ஒரு மனிதன், லௌகீக சம்பத்துக்களைத் தேடவேண்டும்; ஐசுவரியவானாய் வாழவேண்டும்; இராச்சியபாரங்களைக்கட்டிஅரசாளவேண்டும்; விதம்விதமான நூதன கருவிகளையும் இயந்திரங்களையும் கண்டுபிடிக்கவேண்டுமென உலக சாஸ்திரங்களிலே நாட்டமுடையவனாயிருக்க விரும்புவானேயானால், அவன் உடனே மேலைத் தேசவாசிகளிடத்திலே ஐரோப்பியர்களிடத்திலே வெள்ளை மனிதர்களிடத்திலே சென்று அவர் கீழே சாந்தமாக இருந்து அந்தக் கலைஞான சாஸ்திரங்களை நன்றாய்க் கற்றுத் தேறிவரவேண்டும். இன்னொரு மனிதன், வைதீக விஷயத்திலே மேம்பட்டவனாய் இந்த உலகமெல்லாவற்றையும் சந்தையிற்கூட்டமெனத் தள்ளிப்போட்டு கடவுளைத்தேடவேண்டும் அவரது பேரின்ப மோட்ச சாம்ப்ராச்சியத்தை அடையவேண்டும். அனந்த நித்திய காலமாக அந்தப் பகவானை முகமுகமாய்ச் ஸ்துதித்து அவருடன் ஒன்றித்துவாழவேண்டுமெனவிரும்புவானேயாயின் அவன் உடனே அந்தக்ஷணமே ஆசியவாசிகளாகிய எங்களிடத்தில் கீழ்தேச மாந்தர்களாகிய நம்மவர்களிடத்தில் வந்து நமது தொண்டர்களாய்ச் சேர்ந்து நமது சீடர்களுடன் அந்த வைதீக ஞான நூற்களாகிய சாஸ்திரங்கள் முற்றும் கற்றுத் தன்னைப் பக்குவனாக்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் மனுக்குலம் பிறந்த இடமும் அது பால்குடித்து வளர்த்தப்பட்ட தொட்டியும் அது வைதீக சாஸ்திர வேதங்களைக் கற்றுக்கொண்ட பள்ளிக்கூடமும் இங்கேதான் இருக்கின்றது. அதிபிதாக், ஆதாம், மனுவா, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆதிய மகான்களும், ஆகம

சாஸ்திரிகளாகிய மோசேசு, புத்து, கிறீஸ்து, மகமது என்னப்பட்ட பெருங் குரவர்களும் நபிமார்களென்னப்பட்ட தீர்க்கதரிசிகளும், ரிஷிகளும் தோன்றிய பரிசுத்த பூமி நம் ஆசியாக்கண்டமாகிய கீழ்ப்பூமியே; என்று பெரிய கலைஞான சாஸ்திரியாகிய ஸ்ரீமத்; சுவாமி விவேகானந்தர் அவர்கள் நமது பரிசுத்த தேசத்தையும் பரிசுத்த தொண்டர்களையும் பற்றிப் புகழ்ந்து சொன்னவற்றையும் அவர் சரிதை மூலமாகக் கேள்விப்பட்டிருப்பீர்களென நினைக்கிறேன். இத்தகைய மகோன்னதமான தேசத்திலே; ஞானிகளும், ரிஷிகளும், நபிமார்களும், தீர்க்கதரிசிகளும், அல்லும் பகலும் சதா கடவுளுக்காய்த் தொண்டுசெய்துவந்த இந்த பரிசுத்த பூமியிலே நான்கு பெருங்குரவர்களும், அறுபத்துமூன்று திருத்தொண்டாதிகளும் ஆள்வார்களும் தங்களது தேவார திருவாசகங்களால் அந்த ஈஸ்பரனை வாழ்த்திப் போற்றித் துதித்த இந்தத் தென்னிந்திய திருப்பதியிலே இந்த நரகல் சாப்பிடும் பன்றியாகிய நாஸ்திகப் பசாசு தலையெடுக்க நாம் பார்த்துக்கொண்டு வாளா சும்மாயிருக்கலாமா? எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்ற சுலோகப்படி கடவுள் ஒருவர் உண்டென்று விசுவசிக்கும் வைதிக வாதிகள் சகலரும் ஒத்து ஒருமித்து நிமிர்ந்து ஒருகை பார்ப்போமேயானல் இந்த நாஸ்திகச் சுண்டெலிகள் நம்மை எதிர்க்க முடியுமா? மல்லுத் தொடுக்க முடியுமா? "மலையை விழுங்கும் வீரனுக்கு மண்ணாங்கட்டி என்ன, பச்சடியா! கிச்சடியா? வாருங்கள் ஒன்று சேருங்கள் ஒருகை பாருங்கள். நமது ஆஸ்திகச் சட்டிப் பீரங்கி தீருங்கள். நரக நாஸ்திகக் கோட்டையைச் சுக்கல் சுக்கலாய்ப் பொடிப்படுத்தித் தாருங்கள். இதுவே உங்கள்மேற் சுமந்த கடமை.

1914-ம் ஆண்டில் நடந்த வல்லரசுகளின் யுத்த காலத்தில் சேனைகள் காணாதபடியால் ஜெர்மன் வான்கிண்டன்பேர்க் என்னப்பட்ட பெரிய சேனைத்தலைவன் ஊர்கள்தோறும் திரிந்து வாலிபர்களை படைக்காகத் திரட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், முகவாதையினாலே பற்களெல்லாம் பிடுங்கப்பட்டிருந்த ஓர் வாலிபனைப் பார்த்து நீ சண்டைக்கு உதவமாட்டாய் எனக்கூறி அவனை அப்புறப்படுத்த அந்த வாலிபன் தனது பொக்கைவாயைக்காட்டிக் கெக்! கெக்! என்று சிரித்தானாம். உடனே சேனைநாயகன் கோபங்கொண்டு அடா பயலே நீ சிரித்ததற்குச் சரியான பதில் கொடுக்க வேண்டும், அல்லது இக்கணமே நீ தண்டிக்கப்படுவாய் எனக் கெர்ச்சிக்க! அந்த வாலிபன் கூறுவான் படைத்தலைவனே! சேனைகளின் அதிபனே! நான் இதுகாலபரியந்தம் நடைபெற்றுவந்த யுத்தங்களைப் பற்றியெல்லாம் தேச சரித்திரங்களைக்கொண்டும் புதினப்பத்திரங்களைக் கொண்டும் வாசித்தறிந்திருக்கிறேன். அவைகளெல்லாம் அம்பாலும் வில்லாலும் வாளாலும் கையாலும் சட்டிப்பீரங்கிகளாலும் நடைபெற்றவைகளாய்க் காணக்கிடன்றன. தற்போது தாங்கள் தொடங்கியிருக்கின்ற பெரிய யுத்தமோ பல்லுக்குரியவைகளாய்க் கடித்துப் பிடுங்குகிற யுத்தமாய்த் தெரியப்படுகின்றது அதனாலேதான் முப்பத்திரண்டு வயதுள்ள பலசாலியான என்னை எனது பற்களில்லாத காரணத்தினாற்றான் கிழவனென ஒதுக்கி தள்ளிவிட்டீர்கள் போலும். நீர் தற்போது தெரிந்திருக்கும் இந்த யுத்த வீரர்களில் ஒருவனைத் தனித்து என்னுடன் கை சண்டைக்கு விட்டுப்பார்த்தால் என்பலம் தெரியுமென மெதுவாக கூறலானான். இந்தச் சம்

பவத்தை கேட்டிருந்த சேனைத்தலைவன் அவன் வயதுசென்ற கிழவன் அல்லவென்றும் அவனது முகவியாதி காரணமாய்த் தான் பற்கள் எடுக்கப்பட்டுப் பொக்கைவாய் தோன்றியதென்றும் நிச்சயித்து அவனைத் தன் படையிலே சேர்த்துக் கொண்டான்.

இந்திய வைதீக சிகாமணிகளே! வேதாபிமான வீர கேசரிகளே! ஐரோப்பியர்களின் தேசபக்தியை இராச பக்தியைப் பார்த்தீர்களா! நாங்களிப்போ தொடங்கும் ஞானயுத்தம் சுவாமி விவேகானந்தர் மொழிந்ததுபோல அழிந்து போகும் இந்த உலகத்தைப்பற்றியல்ல, அழியாத முடியாத கடவுளைப்பற்றி அவரது அரசாட்சி நம்மில் சதா குடிகொண்டிருக்கும்படியான ஓர் வைதீக ஞானயுத்தமே. பாருங்கள் இந்த நாஸ்திகப்பதர்கள் ஆடவரைமட்டு மல்லவே? பெண்களையுந்தானே இந்த மானக்கேடான சங்கத்தில் சேர்த்துக் கொண்டு அவர்களையும் அசுசிப்படுத்திக்கொண்டு பத்திரிகைகளிலும் பிரசங்கங்களிலும் அந்த இந்திய மாதரசிகளைச் சேர்த்து வைத்துக் கொண்டு செய்யும் கூத்துகளென்றால் அம்மம்மா? இங்கு வாயால் சொல்லவும் கையால் இன்னதெனத்தீட்டிக் காட்டி எழுதவும் கூடியவைகளோ? அதிலும் உலகத்தை அறியாத உலக நடபடி ஒன்றுந்தெரியாத பெண்மக்கள் எத்தனையோபேர் இருக்கிறார்கள். இப்பெண்கள் கல்வி சாஸ்திரம் சிறிதாவது படித்திருந்தாலும் உலகநடபடி ஞானங்களிலோ சுத்த சூனியமாய் காணப்படுகிறார்கள்.

இந்த சு. ம. கட்சியைச்சேர்ந்த தம்பதிகள் இருவர் வேலைகாரணமாக ரங்கூனுக்குப் போயிருந்தார்கள். பெண்

பிள்ளை பீ. எ. வரைக்கும் வாசித்திருந்தாலும் சமையல் பாகம் செய்யுந்திறமையோ மருந்துக்குந் தெரியமாட்டாது. தற்செயலாய் ஒருநாள் சமையல்காரன் சுகவீனமாய்ப் படுத்திருக்கவேண்டிவந்தபடியால் இந்த படித்தபெண்மணிதானே அடுக்களை வேலை பார்க்க வேண்டியதாய் வந்தது. பாவம்! என்செய்வாள் இந்த இளநங்கை எட்டணுவுக்கு மீனும் எடுப்பித்து மீன்கறியிலே பொரியலென்றும் குளம்பென்றும் ரெட்டென்றும் புட்டென்றும் தன் படிப்பின் திறமையைக் காட்டி நான்குவித பாகமாய்ச் சமையல் சமைத்துப் புருஷன் வரவை எதிர் பார்த்திருந்தாள். அவர் வந்ததும் சிரித்துச் சிரித்து அவருக்கு சாப்பாடு போட்டுக்கொண்டு நின்றாள். சோற்றைப்போட்டு மீன் வகைகளையும் குளம்புகறியையும் பொரியல்வகைகளையும் விதம் விதமாகப்படைத்தாள். அவர் சாப்பிடும்போது இதுயார் சமைத்தது? எனவினவினர். அம்மாள் நடந்த சம்பவங்களைக் கூறக்கேட்டு, இதென்ன! மீன் கறிகளிலெல்லாம் ஒருவிதமான வெடில்மணம் வீசுகின்றதே? இது என்ன புதுமையா யிருக்கிறது? எனக் கேட்டான். பெண்மணிக்கு கோபம் வந்துவிட்டது. நீங்கள் சொல்லுவதொன்றும் எனக்குப் புலப்படவில்லையே? "கழுவிக்கெட்டது திறைச்சி கழுவாமல் கெட்டது மீன்" என்ற பழமொழியை யனுசரித்து ஒரு அணுவுக்கு சோப்பு வாங்கி வைத்து நன்முய் மீனை தேய்த்து தேய்த்து பத்துப்பன்னிரண்டு தண்ணீரிலே கழுவியும் அதன்மேலும் வெடில்மணம் வீசுகின்றதென்றால் இதென்னகொள்ளை, "பொய்யைச்சொன்னுலும் பொருந்தவன்றே சொல்லவேண்டுமெனக் கோபிக்கும் பொழுது புருஷன் சமாதான வார்த்தை கூறிச் சவுக்கார

மனமே மீனில் மீசுரமாய்க் காணப்படுகிறதென்றும் அதைச் சாப்பிடச்செய்து சு. ம. பெண்மணிகளின் உலக அறிவை உலகுக்கு வெளிப்படுத்தலாயினர்.

பார்த்தீர்களா! சமையல் பாகந்தெரியாத பெண்களுக்குக் கடவுளைப்பற்றிய அறிவு வந்ததென்றும் ஞானம் பிறந்ததென்றும் குருடன் குருடனுக்கு வழிகாட்டத்துணிந்தது போல இந்தப் பெண்மணிகளும் துணிந்து நிற்பதைப் பார்ப்பதல்லோ வேடிக்கையாயிருக்கின்றது.

கடைசியாக, நண்பர்களே! நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து இந்த நாஸ்திகப்பேயை நமது நாட்டைவிட்டு ஓட்டத் தீவிரிக்கவேண்டும். பிரசங்கங்களாலும் துண்டுப் பிரசுரங்களாலும் இந்த ஞானக்குருடருக்கு நல்லறிவுச்சுடரைக் கொளுத்த நீங்கள் ஏகோபித்து முன்னுக்கு வரவேண்டும். ஒருபோது இந்த நாஸ்திகப்பதர்கள் இல்லாத புறணி வடுவக்கணைகளையும் கோள் குண்டணிகளையும் உங்களைப்பற்றிப் பேசிப்போடுவார்கள், எழுதிவிடுவார்கள் என்று பயந்து மவுனசாதனை செய்யவேண்டாம். இவர்கள் முன்னர் பேசியிருக்கும் தூஷண பாஷண கோஷண மொழிகளைத் தானே மீண்டும் கக்குவார்கள். "மொட்டைச்சிக்கு சன்னதம் வந்தால் கிடக்கின்ற மயிரைத்தானே சிலுப்புவாள்" ஆதலால் இந்த மொட்டையாகிய சுயமரியாதைக் கட்டைகளைச் சீக்கிரம் அடக்கி அவர்கள் வாய்மதங்களை மடக்கிப் போடவேண்டும்.

இந்த மிரட்டுக்கும் சந்தனப் பொட்டுக்கும் தென்னிந்திய வைதீகர்கள் பயப்படமாட்டார்களென்பதை யவர்கள் கண்டுணரச்செய்யவேண்டும்.

“அவலட்சணமுள்ள குதிரைக்குச் சுழி லட்சணம் பார்ப்பான் ஏன்” என்று இம்மட்டில் விடுக்கின்றேன். இன்னும் வரில் பின்னும் வரும்.

இங்ஙனம்,

ஆதராரியபுர வீரகேசரி

சுபம்! சுபம்!! சுபம்!!!

Printed at the S. P. Press, Tuty.

# விளம்பரம்.

நாஸ்திக இயக்க மண்டையை

உடைக்கும் தண்டாயுதம்.

| | | |
|---|---|---|
| 100-புஸ்தகம் | ரூ | 2—0—0 |
| தனிப்பிரதி விலை | ,, | 0—0—6 |

விலாசம்

ஏ. வீ. டீ. பாக்கியம்பிள்ளை,

புஸ்தக வியாபாரம்,

தூத்துக்குடி.